*6*

# மீளக்கட்டுவித்தலின்போது ஆராதனையில் இசை

*மீளக்கட்டுவித்தலின் சபைகளின் ஆராதனைகளுக்குள்ளும் இசைக்கருவிகள் தங்கள் வழியை ஏற்படுத்தின. அமெரிக்க உள்நாட்டு யுத்தத்திற்கு முன்பு (1861-65), இசைக்கருவிகளைப் பயன்படுத்திய சபைக்குழுமங்கள் மிக அரிதாகவே அறியப்பட்டிருந்தன. ஒஹியோ மாகாணத்தில் இருந்த ஆறாவது தெரு சபைக்குழுமம் இசைக்கருவிகளின் இசையைப் பயன்படுத்திற்று.[1] 1859ல், கென்ட்டகி மாகாணத்தின் மிட்வே என்ற இடத்தில் இருந்த சபையில், சில உறுப்பினர்களால் மறுப்புத் தெரிவிக்கப்பட்ட போதும், L. L. பிங்கெர்ட்டன் என்பவரின் செல்வாக்கு மெலோடியன் என்ற இசைக் கருவியைக் கொண்டுவந்தது. 1851ல் அலெக்சாண்டர் கேம்ப்பெல், "இப்படிப்பட்ட உதவிப்பொருட்கள் ஆவிக்குரிய சிந்தை கொண்ட கிறிஸ்தவர்கள் யாவருக்கும், இசைநிகழ்ச்சியில் மாட்டிற்குக் கட்டப்படும் ஒரு மணியைப் போல் இருக்கும்" என்று கூறினார்.[2]*

*யுத்தத்திற்குப் பின்பு ஏற்பட்ட மாற்றம் பற்றி J. W. மெக்கார்வீ (1829-1912) விளக்கம் அளித்தார். அதற்கு முன்பு, இசைக்கருவிகள் பயன்படுத்துதலை எந்தப் பிரசங்கியார்களும் பரிந்துரைக்கவில்லை, ஆனால் அது சந்தர்ப்பவாதத்தின் விஷயமாக மாத்திரமே இருந்தது என்பதில் சிலர் மனநிறவு கொண்டிருந்ததை மெக்கார்வீ கண்டார். வேதவசனங்களில் இசைக்கருவிக்கு அதிகாரத்துவம் எதுவும் இருப்பதில்லை என்று மெக்கார்வீ வலியுறுத்தினார்.[3]*

*"தேவனை ஆராதிப்பதற்குக் குறிப்பிடப் பட்டுள்ளவற்றினுள் புதுமையை அறிமுகப்படுத்துவதற்கு மனிதர்களின் உரிமை" என்பது இடர்ப்பாட்டுக்குரியது என்று மோசஸ் E. லார்டு (1818-80) சுட்டிக்காண்பித்தார்.[4]*

*இசைக்கருவி என்பது சந்தர்ப்பவாதத்திற்கு உட்பட்டது என்ற உரிமை கோருதலுக்கு, அமெரிக்க மருத்துவத் துறை மருத்துவரும் மார்க்கரீதியான நடத்துனருமான ராபர்ட் ரிச்சர்ட்ஸன் (1806-76) எதிர் மறையாகப் பதில்அளித்தார். அவர், "கிறிஸ்தவர்கள் இசைக்கருவிகளைப் பயன்படுத்த வேண்டும் என்று புதிய ஏற்பாட்டில் எங்காவது கூறப்பட்டிருந்தால், எவ்வகையான இசைக்கருவியைப் பயன்படுத்த வேண்டும் என்ற கேள்வியானது சந்தர்ப்பவாதத்திற்கு உட்பட்ட கேள்வியாகும்" என்று கூறினார்.[5]*

*இசைக்கருவிகளைப் பயன்படுத்தும் நடைமுறையை ஆதரித்தவர்கள் சிறுபான்மையாக இருந்தாலும் அல்லது பெரும்பான்மையாக இருந்தாலும், சபைக்குழுமத்திற்குப் பின் சபைக்குழுமத்தில், இசைக்கருவிகளின் அறிமுகம் குறித்து பிரிவினையும் கசப்பும் வளர்ந்தது. பல நிகழ்வுகளில், இசைக் கருவிகளை ஆராதனையில் பயன்படுத்துவதை எதிர்த்தவர்கள் அந்த சபைக்குழுமத்தில் இருந்து விலகிச் செல்ல நேர்ந்தது.*

*எபேசியர் 5:19ல் psallo என்ற கிரேக்க வார்த்தையானது கம்பிகளை மீட்டுதல் என்பதை மறைமுகமாக உணர்த்திற்று என்று* O. E. *பெய்ன் என்பவர் கூறிய நிகழ்வுடன் இசைக்கருவிகள் பற்றி விவாதத்தில் பிரதானமான முதல் தற்காப்பு வந்தது.*[6] *இந்த விவாதமானது,* "making music" *அல்லது* "making melody" *என்ற ஆங்கில மொழிபெயர்ப்பின் நிகழ்வுடன் இசைக்கருவியை அனுமதித்தல் இன்றளவும் ஏற்படுத்தப் பட்டுக் கொண்டுள்ளது. இந்த விவாதத்தை எதிர்ப்பவர்கள், அர்த்தம் இதுவாக இருந்தால்,இசைக்கருவியைப் பயன்படுத்தல் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்குமே என்பதை எப்போதும் சுட்டிக்காண்பித்துள்ளனர். இப்படிப்பட்ட சொற்றொடராக்கம், ஒரு குழுவினர் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் வகையில், செய்ய வேண்டியது அல்லது செய்யக்கூடாதது என்பதை சந்தர்ப்பவாதத்தின் விருப்பத் தேர்வாக முன்நிறுத்துவதில்லை. இசைக்கருவிகளை எதிர்த்து நின்றவர்கள், இந்தச் சொற்றொடர் கம்பிகளை மீட்டுதல் என்று அர்த்தப்படுமானால், இவ்வசனம் மனித இருதயம் என்ற இசைக்கருவியைக் குறிப்பிகிறதே என்றும் வலியுறுத்தினர். ஹியூகோ மெக்கார்டு, தமது புதிய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பில், பின்வரும் பொழிப்புரையைக் கொடுத்தார்: "இருதயத்தின் கம்பிகளை மீட்டுதல்."*

*தற்காப்பு வாதத்தின் இன்னொரு வகையானது, பதினாறு சங்கீதங்களில் இசைக்கருவிகள் குறிப்பிடப்பட்டுள்ளதால், அவைகள் தேவனுக்குப் பிரியமற்றவையாக இருப்பதில்லை என்று வாதிடுகிறது. இத்துடன் வெளிப்படுத்தின விசேஷம் பரலோகத்தில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துதல் பற்றிச் சித்தரிப்பதும் சேர்த்துக்கொள்ளப்படுகிறது. இவற்றைத் தேவன் அங்கீகரித்து இருக்க வேண்டும் என்பது முன்மொழியப்பட்ட முடிவாக உள்ளது. சங்கீதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பல விஷயங்கள், இசைக்கருவிகளைப் பயன்படுத்தும் சபைக்குழுமங்களினால் தழுவப்படவில்லை, இதே விஷயம் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தைக் குறித்தும் உண்மையானதாக உள்ளது.*

*வாய்ப்பாட்டை மாத்திரம் பயன்படுத்தும் சபைக்குழுங்கள், ஆராதனையில் இசைக் கருவிகளின் பயன்பாட்டை, வேதாகம அதிகாரம் என்ற சுவரில் இருந்த கசிவாக தொடக்கத்திலிருந்தே கண்டுள்ளன. 1856ல் டோல்பெர்ட் ஃபேன்னிங் (1810-74) என்பவர், "நமது நாட்டின், ஆர்கன் மற்றும் வயலின் ஆராதனை மற்றும் பாடகர்குழுவின் பகட்டான பாடுதல்கூட பரிசுத்தமானதை ஏளனம் செய்வதாகவே நாம் கருதுகிறோம்" என்று எழுதினார்.*[7]

*1861ல் ஐசக் எர்ரெட் என்பவர், "[சீர்திருத்தம் என்ற] இந்த இயக்கத்தின் மேதைத்தன்மையானது முந்திய சீர்திருத்தங்களைப் போன்றே, பாடகர் குழுவினர் பாடுதல் மற்றும் இசைக்கருவிகள் பயன்பாடு ஆகியவற்றிற்கு சாதகமானதாக இருப்பதில்லை" என்று கூறினார்.*[8] *1864ல்* J. W. *மெக்கார்வீ பின்வருமாறு எழுதினார்:*

> *தற்போதய சீர்திருத்தத்தின் தொடக்க ஆண்டுகளில், பொது ஆராதனையில் இசைக்கருவிகளைப் புறக்கணித்தல் என்பதற்கு முழுமையும் ஒத்த கருத்து இருந்தது. அது வேதவசனரீதியானதல்ல, கிறிஸ்தவ நிறுவனங்களுக்கு இசைவிணக்கமானதல்ல மற்றும் அது மோசடியின் ஆதாரமுலமாக உள்ளது என்று அறிவிக்கப் பட்டிருந்தது.*[9]

பழைய ஏற்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக இருந்தது புதிய ஏற்பாட்டின்கீழ் தவறானதாக இருக்க முடியும் என்று உறுதிப்படுத்திய மெக்கார்வீ, மிருகபலி, இரத்தம் தெளித்தல், தூபவர்க்கம் இடுதல் மற்றும் ஆசரிப்புக்கூடாரத்தில்/தேவாலயத்தில் நிரந்தரமாக எரியும் விளக்குகளை கொண்டிருத்தல் என்ற உதாரணங்களைக் கொடுத்தார். பல்வேறு பருவங்களின் ஆசரிப்பு மற்றும் அங்கிகளின் பயன்பாடு ஆகியவற்றை மற்ற உதாரணங்கள் உள்ளடக்குகின்றன. மேலும் அவர், பூமியில் தவறாக உள்ளது எதுவோ, அது பரலோகத்தில் தூதர்களுக்கும் பரிசுத்தவான்களுக்கும் அனுமதிக்கப் படலாம் என்றும் உறுதிப்படுத்தினார். பொன் சுரமண்டலங்கள் என்பவை நேரடி அர்த்தமாக எடுத்துக் கொள்ளப்படலாம் என்பதில் சந்தேகம் கொண்ட அவர், புதிய ஏற்பாட்டு போதனையானது, ஏற்றுக் கொள்ளப்படக் கூடியது என்ன என்பதின் அளவீடாக உள்ளது என்று வலியுறுத்தினார். மெக்கார்வீ, தமது வாசகர்களிடத்தில், புதிய ஏற்பாட்டில் அதிகாரத்துவப் படுத்தப்படாததாக உள்ள ஆனால் ஆராதனை விஷயத்தில் ஒரு கூறாக உள்ளதாக அறியப்பட்டுள்ள விஷயத்தைத் தரும்படி அறைகூவல் விடுத்தார்.[10] 140 ஆண்டுகளின் கலந்துரையாடலில் எவ்வளவு சிறிய வளர்ச்சி ஏற்படுத்தப் பட்டுள்ளது என்பது திகைப்புக்கு உரியதாக உள்ளது. இன்றைய நாட்களில் கூறப்பட்டுள்ளது, தொடக்கத்தில் கூறப்பட்டிருந்ததாகவே உள்ளது.

1939ல், இன்டியானாபொலீஸில் நடத்தப்பட்ட கிறிஸ்தவ சபையின் ஐக்கியக் கூட்டத்திற்கு, "ராக்கூன்" ஜான் ஸ்மித் என்பவரின் பேரனான H. லியோ போல்ஸ், கிளாட் E. விட்டி என்பவரால் அழைக்கப்பட்டார். போல்ஸ், ஊழிய சமூகம் பற்றி, இசைக்கருவி இசையைப் பற்றி, மற்றும் சபையானது நாமரணக் கூட்டமாக இருத்தல் பற்றிப் பேசினார். அந்த உரையானது பிற்பாடு, *Gospel Advocate* மற்றும் *Christian Standard* என்ற பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது.

போல்ஸ் எளிமையாகவும் நேரடியாகவும் பேசுபவராக இருந்தார். அவர் இசைக்கருவிகளின் இசை பற்றிய கருத்துக்களினால் ஏற்பட்ட பிரிவினைக்குக் காரணங்களை ஆராய்ந்தார். இசைக்கருவியை அறிமுகப் படுத்தியவர்கள் அதை சகிப்புத்தன்மையும் சுயாதீனமும் இருக்க வேண்டிய சந்தர்ப்பவாத விஷய மாகக் கருதினர். இந்த நடைமுறை அறைகூவல் விடுக்கப்பட்டபோதுதான் மற்ற விவாதங்கள் மேம்படுத்தப் பட்டன.

"கிறிஸ்தவ சுயாதீனம்" என்பது, ஒருவர் தாம் விரும்புகிற எதையும் மற்றவர்களின் மறுப்பின்றி ஆராதனையில் கொண்டிருக்க முடியும் என்று அர்த்தப் படுவதாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. இரண்டு சாத்தி யக்கூறுகளை மாத்திரமே போல்ஸ் கண்டார்: நடைமுறையானது அதி காரத்துவப் படுத்தப்பட்டிருத்தல் அல்லது அது கருத்து மற்றும் சந்தர்ப்பவாதம் ஆகியவற்றின் வட்டாரத்தில் இருத்தல். எபேசியர் 5:19ல் உள்ள *psallo* என்பது இசைக்கருவியைப் பயன்படுத்தும்படி கட்டளை இடும் என்றால், அது பயன்படுத்தப்பட்ட வேண்டும். அது விருப்பத் தேர்வின் விஷயமாக இருப்பதில்லை. இசைக்கருவி என்பது சந்தர்ப்பவாதம் மற்றும் கருத்தின் பகுதியில் இருக்கும் என்றால், அது பிரிவினை ஏற்படுத்துவதால் பாவம் நிறைந்ததாக உள்ளது (காண்க 1 கொரிந்தியர் 8:13). அதைப் பயன்படுத்துபவர்கள் அதனால் விளையும் பிரிவினைக்குப் பொறுப்பாளிகளாக உள்ளனர். அதை மறுப்பவர்கள் அல்ல, ஆனால் அதை அறிமுகப் படுத்தியவர்களே பிரிவினைக்குக்

காரணமாயினர். J. W. மெக்கார்வீ, ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்பே சந்தர்ப்பவாதத்தின் விவாதத்திற்குப் பதில் அளித்திருந்தார்.[11]

அமைதி காக்க வேண்டிய பகுதிகளில் கருத்தின் சுயாதீனமானது தேவனுடைய வசனத்திற்குச் சமமாயிருக்கும்படி உயர்த்தப்பட்டால், ஐக்கியம் இருக்க இயலாது என்று போல்ஸ் வலியுறுத்தினார். அவர் தமது உரையை ஆதரிக்கப் பிரபலான பின்வரும் வசனங்களை மேற்கோள் காண்பித்தார்: உபாகமம் 12:32; நீதிமொழிகள் 16:25; மத்தேயு 15:1-9. நீண்ட காலத்திற்கு முன்பே எரேமியா, "கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்" என்று எழுதினார் (எரேமியா 10:23).

"மனிதர்கள் கருத்துக்களைக் கொண்டிருக்கலாம்; மனிதர்கள் கருத்துக்களைக் கொண்டிருப்பார்கள்; ஆனால் இந்தக் கருத்துக்களைக் கொண்டு செய்யப்பட வேண்டியது என்ன? இவைகள் 'அமைதிகாக்க வேண்டிய பகுதிகளுக்கு' உரியவையாக இருப்பதால், அவைகள் அமைதியாக வைக்கப்படட்டும்" என்று H. லியோ போல்ஸ் அறிவித்தார்.[12]

---

குறிப்புகள்

[1]John Boggs, "City Items," *Northwestern Christian Magazine* (December 1855): 191. [2]Alexander Campbell, "Instrumental Music," *The Millennial Harbinger* 22, 4th ser., 1 (October 1851): 582. [3]J. W. McGarvey, "A Little Further Along," *Apostolic Times* (April 1869): 13. [4]Editor's note, in Hiram Christopher, "Instrumental Music in Churches of Christ," *Lard's Quarterly* (October 1867): 368. [5]Robert Richardson, "Expediency," *Christian Standard* (1868): 409. [6]O. E. Payne, *Instrumental Music Is Scriptural* (Cincinnati: Standard Publishing Co., 1920), 62. [7]Tolbert Fanning, "The Church of Christ, No 2," *Gospel Advocate* 2 (1856): 199. [8]Isaac Errett, "Church Music," *The Millennial Harbinger* 35, 4th ser., 3 (October 1861): 559. [9]J. W. McGarvey, "Instrumental Music in Churches," *The Millennial Harbinger* 35, 5th ser., 7 (November 1864): 510. [10]Ibid., 511-13.

[11]J. W. McGarvey, "Bro. Hayden on Expediency and Progress," *The Millennial Harbinger* 39 (April 1868): 213-16. [12]H. Leo Boles, "The Way of Unity Between 'Christian Church' and Churches of Christ," *Gospel Advocate* 81 (8 June 1939): 533; Alexander Campbell, "Opinionism," *The Millennial Harbinger* 1, new ser., 10 (October 1837): 439-42.

## அடிக்கடி கேட்கப்பட்ட கேள்விகள்

***கேள்வி:*** தொடக்ககால சபையானது இசைக்கருவி இசையைப் பயன்படுத்தவில்லை என்று நாம் எவ்வாறு அறிகிறோம்?

***பதில்:*** தொடக்ககால சபையானது ஆராதனையில் இசைக் கருவிகளைப் பயன்படுத்தவில்லை என்பதை வரலாற்றாளர்கள் ஏறக்குறைய உலகளாவிய வகையில் ஒப்புக்கொள்கின்றனர். இருப்பினும் இதற்குக் காரணம் என்ற வகையில் பல்வேறு விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. H. M. பெஸ்ட் மற்றும் D. ஹட்டர் ஆகியோர் கி.பி. 70ல் தேவாலயம் அழிக்கப்பட்ட பின்பு, யூதர்கள் இசைக் கருவிகளைப் பயன்படுத்தவில்லை என்று குறிப்பிட்டார்.[1] இது கிறிஸ்தவ ஆராதனையில் ஒரு செயல்தாக்கத்தைக் கொண்டு இருந்தது என்று சிலர்

*எவ்வித ஆதாரமும் இன்றி நினைத்தனர். பெஸ்ட் மற்றும் ஹட்டர் ஆகியோர் பின்வருமாறு இதை விளக்கப்படுத்தினர்:*

> *... சபையானது இசையைப் பயன்படுத்தும்படி அறிவுறுத்தப் பட்டிருந்தது; அது சங்கீதங்கள், கீர்த்தனைகள் மற்றும் ஞானப்பாடல்கள் ஆகியவற்றைக் கொண்டு (ஒருவருக்கொருவர்) உரைக்கும்படி அறிவுறுத்தப்பட்டிருந்தது. இசைக்கருவிகளின் இசை அல்லது நடனம் பற்றி விடுபடுதல்கள் ஏதேனும் உள்ளன என்றால், அவைகள் கட்டுப்படுத்தப்படாத உணர்வுகளின் [கிரேக்கமொழியில் இது* orgiastic *என்று கூறப்படுகிறது] மாயச்சடங்குகளில் பயன்படுத்தப்பட்டதால் ஒரு அடையாளம் என்ற வகையில் சிலர் புரிந்துகொள்வதைப் போன்று கூட்டியுரைக்கப்பட அவசியமில்லை, அல்லது அந்த விஷயத்திற்காக, இப்போது வெறுப்புள்ள யூதமதத்தின் ஆராதனையில் இருந்ததென்றால் அவர்கள் தவறானவர்களாக இருந்தனர். ஒரு விஷயத்தில் தொடக்ககால சபையானது வெளிப்படையானதாக இருந்தது, அது தற்காலிகமாக இல்லங்களில், கப்பல் களில், துறைமுகங்களில் மற்றும் பொது இடங்களில் கட்டுப்படுத்தப்பட்ட அமைவைக் கொண்டிருந்தது. அது தன்னை மிதித்து அழிக்க முயற்சி செய்தவர்களிடமிருந்து அடிக்கடி தன்னை ஒளித்துக் கொண்டிருந்தது. அது தனது சொந்த ஆராதனையில் மிகவும் எளிய இசை வடிவமைப்புகள் மற்றும் நடவடிக்கைகள் தவிர வேறு எதற்கும் நேரம் கொண்டிராததாக இருந்தது.*[2]

*கிறிஸ்தவர்கள் இசைக் கருவிகளைப் பயன்படுத்தாது இருந்தது ஏன் என்பதற்கான இந்த விளக்கம் ஒரு எளிய யூகமாக மாத்திரம் உள்ளது, ஆனால் இது தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் அவற்றை ஆராதனையில் பயன்படுத்தவில்லை என்று காண்பிக்கிறது.*

*முதல் கிறிஸ்தவர்கள் தங்கள் ஆராதனையில் இசைக்கருவிகளின் துணையின்றி கீதம் இசைத்தனர் என்று நினைக்கப்படுகின்றனர். "கீதங்கள், தனியொலி மற்றும் அளவிடப்படாத இசைகளுடன் பாடப்பட்டன."*[3]

*எவரெட் ஃபெர்குஸன் என்பவர் தொடக்ககால சபையின் இசைபற்றிய கூற்றுகளின் விமர்சனம் ஒன்றில் பின்வருமாறு எழுதினார்,*

> *கிறிஸ்தவ ஆராதனை ஊழியங்கள் பற்றிய தொடக்ககாலக் குறிப்புகள் பாடுதலைக் குறிப்பிடுகின்றன, ஆனால் இசைக்கருவிகள் பற்றி மௌனமாக இருக்கின்றன. நான்காம் நூற்றாண்டில் சில எழுத்தாளர்கள், கிறிஸ்தவர்கள் மத்தியில் இசைக்கருவிகள் பயன்படுத்தப்படாமை மற்றும் புறதெய்வ வணக்கப் பலிகளிலும் யூத தேவாலயத்திலும் அவற்றின் முக்கிய இடம் ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடு பற்றிக் குறிப்பு எடுத்தனர். தியோடரெட் (Quaes. et resp. ad Orth. 107) மற்றம் நிசெட்டா (Util. Hymn) ஆகியோர், இசைக்கருவி இசையானது தேவனுடைய மக்களின் குழந்தைப் பருவத்திற்குரியதாக இருந்தது மற்றும் பலிகள், விருத்தசேதனம் மற்றம் ஓய்வுநாள் போன்ற பழைய ஏற்பாட்டு நடைமுறைகள் ஆகியவற்றில் இருந்தது, அது இசைக்கருவிகளின் துணையின்றி பாடுதல் நடைபெற்ற புதிய*

*ஏற்பாட்டில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட விஷயமானது இச்சைகளை அமைதிப்படுத்தவும் தேவனைப் பற்றிய சிந்தனைகளை உயர்த்தவும் பயன் நிறைந்ததாக இருந்தது.*[4]

*இசை பற்றிய ஆக்ஸ்ஃபோர்டு என்சைக்ளோபீடியா என்ற புத்தகத்தின் பல்வேறு மறுபதிப்புகள், தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் இசைக்கருவிகளைப் பயன்படுத்தவில்லை என்று சீராக எடுத்துரைக்கிறது. 1983ம் வருடப் பதிப்பானது பின்வருமாறு உரைக்கிறது,*

*முதல் கிறிஸ்தவர்கள் யூதர்களாக இருந்ததால், அவர்கள் தங்கள் சபை கூடுகைகளில், அவர்கள் ஏற்றுக்கொண்ட இசை என்பது குறிப்பாக சங்கீதங்கள் மற்றும் ஞானப்பாடல்களை இசைக்கருவிகளில்லாமல் இசைத்தல் என்பது நேரடியாக ஜெப ஆலய சடங்குகளில் இருந்து எடுத்தாளப்பட்டிருந்தது என்பது ஆச்சரியப்படுவதாக இருப்பதில்லை.*[5]

*பெரும்பான்மையான விஷயங்களில், கிறிஸ்தவர்கள் யூதமதச் சடங்குகள் மற்றும் சடங்காச்சாரங்கள் ஆகியவற்றைப் பிரதியெடுத்தாற்போன்று செய்வதற்கு மாறாக, தேவாலயப் பாரம்பரியப் பழக்கங்களில் இருந்து தெளிவான முறிவை ஏற்படுத்தினர். யூத நடைமுறைகளைப் பற்றிப் பவுல், "ஆகையால், போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வுநாட்களையுங்குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக" என்று விளக்கம் அளித்தார் (கொலோசெயர் 2:16).*

*பாடுதலில் இசைக்கருவிகள் இணைந்திருத்தல் என்ற பழக்கம், பூமியின் ஒவ்வொரு பகுதியிலும் கிறிஸ்தவத்தை நடும்படி இயேசு தமது பின்பற்றாளர்களைத் தயார் செய்து அனுப்பியதற்குப் பல ஆண்டுகளுக்குப் பின்பு நடைமுறைப் படுத்தப்படத் தொடங்கியிருந்தது. இருப்பினும் பல நூற்றாண்டுகள் வரையிலும் ஆர்கன் என்ற வாத்தியமானது பயன்படுத்தத் தொடங்கப்படாதிருந்தது:*

*ஆர்கன் என்பது மேற்கில் மாத்திரம், பேரரசரின் அரண்மனைச் சடங்கில் இருந்து சபைக்கு நகர்த்தப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது, இது நடந்தது ஏழாம் நூற்றண்டிலா அல்லது பத்தாம் நூற்றாண்டிலா என்று விவாதிக்கப்பட்டுள்ளது.*[6]

*வரலாற்றாளர்களின் சாட்சியம் மனதில் பதிவதாக உள்ளது, குறைந்த பட்சமாகக் கூறுவதெனினும், பத்து நூற்றாண்டுகள் வரையிலும் தொடக்ககால சபையானது ஆராதனையில் இசைக் கருவிகளின் இசையைப் பயன்படுத்த வில்லை. இதே முடிவு புதிய ஏற்பாட்டுப் பதிவேடுகளில் இருந்தும் தெளிவாகிறது. எனவே ஆராதனையில் வாய்ப்பாட்டுப் பாடுதலில் தொடர்வதே கிறிஸ்தவர்களுக்குப் பாதுகாப்பான ஓட்டமாக உள்ளது.*

***கேள்வி:*** *ஆராதனையில் இசைக்கருவிகள் பயன்படுத்துதல் பற்றி மீளக்கட்டுவித்தலின் நடத்துனர்கள் போதித்தது என்ன?*

**பதில்:** புதிய ஏற்பாடு இயேசுவின் போதனைகளைக் கொண்டிருந்ததால், அவரது பின்பற்றாளர்களுக்கு அதுவே முழு மாதிரியாக இருந்ததால் மற்றும் அது அப்படிப்பட்டது என்று கிறிஸ்துவின் சபைகளால் உணர்ந்தறியப்பட்டதால், அதை அவர்கள் போதித்தனர்.

ஒருவேளை, மீளக்கட்டுவித்தலின் மிகவும் சக்திவாய்ந்த மற்றும் செல்வாக்கு உள்ளவர் என்று கருதப்பட்ட அலெக்சாண்டர் கேம்ப்பெல் (1786-1866) என்பவர் ஆராதனையில் நடனம் செய்தல் மற்றும் இசைக்கருவிகளைப் பயன்படுத்துதல் பற்றிய கேள்விக்கு எழுத்துப்பூர்வமாகப் பதில் ஒன்றைக் கொடுத்தார்:

> ... புதிய ஏற்பாட்டு காலத்தில், மதரீதியான நடனங்கள், மதரீதியான சுர மண்டலங்கள், கைத்தாளங்கள் மற்றும் எக்காளங்கள் பற்றி நாம் ஒன்றும் வாசிப்பதில்லை. புதிய ஏற்பாட்டில் உள்ள எல்லாக் கட்டளைகள் மற்றும் புத்திகூறுதல்களிலும், நடனம் செய்தலின் பாடக்கருத்து ஒன்றைக் கூட நான் கண்டறியவில்லை. இருப்பினும் அந்தக் காலங்களிலும், மற்றும் முற்பிதாக்கள், யூதர்கள் ஆகியோரின் காலங்களிலும் நடனம் இருந்தது.[7]

கேம்ப்பெல், கிறிஸ்தவ ஆராதனையில் இசைக்கருவிகளின் இடம் என்பது எவ்வளவாக வெளியேற்றப்பட்டதாக இருக்கும் என்பதை அறிவிக்கச் சென்றார்.[8]

*மில்லேனியல் ஹார்பிங்கர்* என்ற புத்தகத்தை அலெக்சாண்டர் கேம்ப்பெல்லுடன் இணைந்து பதிப்பித்த ஐசக் எர்ரெட் (1796-1872) என்பவர், இசைக்கருவிகள் பற்றி ஒரு நீண்ட பாடத்தை எழுதினார். அவர் பின்வருமாறு கூறினார்:

> ... முந்திய சீர்திருத்தத்தின் தன்மை போன்றே, [மீளக்கட்டுவித்தல் என்ற] இந்த இயக்கத்தின் மேதைத் தன்மையானது, பாடகர் குழுவின் பாடுதல் மற்றும் இசைக்கருவிகள் ஆகியவற்றிற்கு ஆதரவாக இருக்கவில்லை ...
>
> ... கிறிஸ்துவின் சபையானது - "கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாக" இருக்கிற "நாகரீகமற்றவர்கள், ஸ்கீத்தியர்கள், அடிமைகள் மற்றும் சுயாதீனர்கள்" என்ற - அவரது மக்களுக்குப் பொதுவான இல்லமாக இருக்கையில், மற்றும் பாடுதல் என்பது பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் தனிப்பட்ட வகையில் பங்கேற்கக்கூடிய ஆராதனையின் ஒரு பாகமாக மாத்திரம் இருக்கையில், பரிசுத்தவான்களின் இந்த சிலாக்கியம் மற்றும் உரிமையில் ஒருகணம் தலையிட பாடகர் குழு பாடுதல் அல்லது இசைக்கருவிகள் ஆகியவை ஒருக்காலும் அனுமதிக்கப்படலாகாது.[9]

புத்திக்கூர்மையுள்ள கல்வியாளரான மோசஸ் E. லார்டு (1818-80) என்பவர், ஆராதனையில் இசைக்கருவிகள் நியாயப்படுத்தப்பட இயலாது என்று காண்பிக்க, கொள்கைகளை முன்வைத்தார். அவர் பின்வருமாறு முடிவுசெய்தார்:

> இப்போது, ... நமது சபைக்குழுமங்கள் சிலவற்றில் *இசைக்கருவிகளின் இசையை* அறிமுகப்படுத்துவதற்கு வற்புறுத்தப்படக்கூடிய தற்காப்பு வாதம் என்னவாக உள்ளது? ஒன்றுமில்லை என்பதே புதிய ஏற்பாட்டின்

ஒவ்வொரு பக்கத்திலும் இருந்து எனது காதுக்குள் இடிமுழக்கம் செய்யும் பதிலாக உள்ளது. கிறிஸ்து அதை எப்போதாவது நியமித்தாரா? அப்போஸ்தலர்கள் அதை எப்போதாவது அனுமதித்தனரா? அல்லது தொடக்கால சபைகளில் யாரேனும் ஒருவராவது அதை எப்போதாவது பயன்படுத்தினாரா? ஒருக்காலும் இல்லை. அப்படியென்றால், இன்றைய நாட்களில் அதை கிறிஸ்துவின் சபைகளுக்குள் அறிமுகப்படுத்த முயற்சி செய்பவரை நாம் எந்த வெளிச்சத்தில் கண்ணோக்க வேண்டும்? அவர் கிறிஸ்துவின் அதிகாரத்துவத்தை அவமானப் படுத்துபவராக மற்றும் கீழ்ப்படிய மறுப்பவராகவும் பழங்கால ஆராதனையின் எளிமை மற்றும் தூய்மை ஆகியவற்றின்மீது புதிய கண்டு பிடிப்புகளைக் காண்பவராகவும் இருக்கிறார் என்று நான் பதில் அளிக்கிறேன். வேறு எந்த வெளிச்சத்திலும் நாம் அவரைக் கண்ணோக்க இயலாது, வேறு எந்த வெளிச்சத்திலும் அவர் கண்ணோக்கப்படக்கூடாது.[10]

J. W. மெக்கார்வீ (1829-1912) என்பவர், ஆராதனையில் இசைக்கருவிகளை எதிர்த்து எழுதிய, மதிக்கப்பட்ட இன்னொரு கல்வியாளராக இருந்தார். அவர் பின்வருமாறு கூறினார்,

தற்போதய சீர்திருத்தத்தின் தொடக்க ஆண்டுகளில், பொது ஆராதனையில் இசைக்கருவிகள் பயன்படுத்துவதற்கு ஒருமித்த முழு எதிர்ப்பு இருந்தது. அது வேதவசனாரீதியற்றது, கிறிஸ்தவ நிறுவனத்திற்கு இசைவிணக்கமற்றது மற்றும் மோசடிக்கு ஆதாரமூலமாக இருந்தது என்று அறிவிக்கப்பட்டது.

... குற்றம் செய்தவர்களின் பலி, இரத்தம் தெளித்தல், தூபவர்க்கத்தை எரித்தல் மற்றும் விளக்குகளை நிரந்தரமாக எரியவிடுதல் ஆகியவை யூதத்துவ ஆராதனையில் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டவைகளாக இருந்தன; ஆனால் அவைகள் கிறிஸ்தவ ஆராதனையில் இருப்பதில்லை; எனவே இசைக்கருவிகளும் இருக்கலாகாது.[11]

ஒவன் D. ஆல்பிரிக்ட்

குறிப்புகள்

[1]H. M. Best and D. Huttar, "Music, Musical Instruments," *The Zondervan Pictorial Encyclopedia of the Bible*, ed. Merrill C. Tenney (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1975), 4:315. [2]Ibid ., 319. [3]Homer Ulrich, *Americana Encyclopedia* (Danbury, Conn.: Grolier Press, 2000), 19:650. [4]Everett Ferguson, ed., "Music," *Encyclopedia of Early Christianity*, 2d ed. (New York: Garland Publishing, 1997), 2:789. சிரியாவில் இருந்த சபையின் நடத்துனரான தியோடொரெட் (கி.பி. 390-458) என்பவர் *Questions and Answers for the Orthodox* என்ற புத்தகத்தை எழுதினார். 107வது கேள்விக்குப் பதிலாக அவர், "எளிய பாடுதல் என்பதல்ல, ஆனால் உயிரற்ற இசைக்கருவிகள், நடனம் மற்றும் கைதட்டுதல் ஆகியவற்றுடன் பாடுதலே சிறுபிள்ளைத்தன நிலைக்கு உரியதாக இருக்கிறது. ஆகவே சிறுபிள்ளத்தன மான, அப்படிப்பட்ட இசைக்கருவிகள் மற்றும் பிறவற்றைப் பயன்படுத்துதல் என்பது சபைகளில் பாடுதலில் இருந்து விலக்கப்பட்டுள்ளது மற்றும் எளியவகையில் பாடுதல்

*மட்டும் விட்டுவைக்கப்பட்டுள்ளது.” கிழக்கு ஐரோப்பாவின் சபை நடத்துனர்களில் ஒருவரான நிசெட்டா (கி.பி. 335-414) என்பவர் On the Utility of Hymn Singing என்ற புத்தகத்தில் “அமைதியாகப் பாடுதல்” என்ற கருத்தைப் பற்றிக் கூறினார். அவர், “பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டது என்ன என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்குப் புதிய ஏற்பாட்டிற்குத் திரும்ப வேண்டிய நேரமாக இது உள்ளது ... விருத்தசேதனம் ஓய்வுநாள், பலிகள், உணவு வகைகளில் வேறுபாடு பார்த்தல் போன்ற சட்டப்பூர்வமான நிறுவனங்கள் மறுக்கப்பட்டுள்ளன. அதேபோன்றுதான் எக்காளங்களும், சுரமண்டலங்களும், கைத்தாளங்களும் தம்புருக்களும் மறுக்கப்பட வேண்டும். ஏனெனில் இவற்றின் சத்தங்கள் மனிதர்களின் வாய்களில் இருந்து வரும் இசை என்ற மேன்மையான பதிலியால் ம ாற்றப்பட்டுள்ளன” என்று கூறினார்.* [5]Anthony Pryer, “Church Music,” *The New Oxford Companion to Music,* ed., Denis Arnold (East Kilbride, Scotland: Oxford Press, 1983), 1:388. [6]Ferguson, 789. [7]Alexander Campbell, “Dancing,” *The Millennial Harbinger* 22, 4th ser., 1 (September 1851): 506. [8]Alexander Campbell, “Instrumental Music,” *The Millennial Harbinger* 22, 4th ser., 1 (October 1851): 581-82. [9]Isaac Errett, “Church Music,” *The Millennial Harbinger* 32, 4th ser., 3 (October 1861): 559. [10]Moses E. Lard, “Instrumental Music in Churches and Dancing,” *Lard's Quarterly* 1 (March 1864): 331.

[11]J. W. McGarvey, “Instrumental Music in Churches,” *The Millennial Harbinger* 35, 5th ser., 7 (November 1864): 510-11.